# சுந்தரமூர்த்தி நாயனாரின் பக்தித்திறம்

# The Piety of Sundaramurthy Nayanar

முனைவர் இரா. சீதா லட்சுமி இராதாகிருஷ்ணன் / Dr. R. Seeta Lechumi Ratha Krishnan[1]

Date of submission: 2023-02-07
Date of acceptance: 2023-04-11
Date of Publication: 2023-07-30
Corresponding author's Name:
Dr. R. Seeta Lechumi
Email: rseeta@um.edu.my

**Abstract**

Saivism is a religion that has Lord Shiva as the ultimate deity. Among those who developed Saivism, 63 Nayanmars are the most notable figures, and Sundaramurthy Nayanar, one of the Nayanmars, is considered one of the Naalvar. We believe that Sundarar is the incarnated son of Sadayanar and Isainyaniyar in Tirunavalur. He received the appellation 'Vanthondan' when Lord Shiva himself came in person and prevented his marriage. The name was bestowed on Sundaramurthy Nayanar for his harsh speech to Lord Shiva. When asked to sing in Tamil, Sundaramurthy Nayanar started singing with the word 'pitta' included in the lyrics, which was a form of his reprimand to Lord Shiva. This event made Lord Shiva convert Sundamurthy Nayanar, a slave, to the Lord's companion. This study is carried out with the primary aim of exploring the devotion found in Thevaram, which the glorious Sundaramurthy Nayanar blessed. This paper explores his piety under three subtopics: 'Guru Bhakti', 'Shiva Bhakti' and 'Adiyar Bhakti'

**Keywords:** The Piety, Sundaramurthy Nayanar, Periyapuranam, Panniru Thirumurai, Bakthi

## முன்னுரை

நாடு நலம் பெற்று வாழ வழி காட்டுவதே சைவநெறி. சிவபெருமானை முழுமுதலாகக் கொண்டு விளங்கும் இந்நெறியைச் 'சிவநெறி' என்று சமய ஆன்றோர் கூறுவர். சைவநெறி அருளாளர் பெருமக்கள் பாடியருளிய பக்தி நூல்களே பன்னிரு திருமுறைகளாகும். பன்னிரு திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகளும் தேவாரம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன. தெய்வத்திற்குச் சூட்டப்படும் பாமாலை என்பதே "தேவாரம்" என்பதன் பொருள்.

தேவாரப் பாடல்களின் முதல் மூன்று திருமுறைகளை அருளிச்செய்தவர் திருஞான சம்பந்த சுவாமிகள்; அடுத்துள்ள 4,5,6 ஆம் திருமுறைப் பதிகங்களைப் பாடியருளியவர் திருநாவுக்கரச சுவாமிகள்; ஏழாவது திருமுறையை அருளிச்செய்தவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

ஆரம்பக் காலத்தில் சம்பந்தரின் பாடல்கள் 'திருக்கடைக்காப்பு' என்றும், அப்பரின் பாடல்கள் 'தேவாரம்' என்றும் சுந்தரரின் பாடல்கள் 'திருப்பாட்டு' என்றும் அழைக்கப்பட்டன. பிற்காலத்தில் மூவர் தமிழும் 'தேவாரம்' என்ற பொதுப் பெயரால் சிறப்பிக்கப்பட்டன (மூவர் தமிழும் சைவ நெறியும், 2014, ஜீ.17).

தேவாரம் அருளிய மூவருள், தம்பிரான் தோழனாகிய சுந்தரரின் பாடல்களை 'மிஞ்சு தமிழ்' என்று அறிஞர்கள் போற்றினார்கள். அதாவது, தோழமை உணர்வுடனும் உரிமையுடனும் இறைவனோடு தொடர்பு கொள்ளும் பாடல்களாக அமைந்திருப்பவை சுந்தரரின் பாடல்கள்.

[1]The author is a senior lecturer in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. rseeta@um.edu.my

## ஆய்வுநெறி

இந்த ஆய்வுக்கட்டுரை நூலக ஆராய்ச்சி அடிப்படையில் அமைந்துள்ளது. இந்த ஆய்வின் முதன்மை நூலாகப் பெரியபுராணமும் பன்னிரு திருமுறையும் இடம்பெறுகின்றன. சுந்தரமூர்த்தி நாயனார் பற்றிய ஆய்வு நூல், கட்டுரை மற்றும் அதன் தொடர்புடைய பல நூல்களை ஆராய்ந்து இவ்ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

## சுந்தரமூர்த்தி நாயனாரின் பக்தித்திறன்

சுந்தரர் பெருமான் திருக்கயிலாயத்திற்கும் இப்பூலகிற்கும் இடையே வாழ்வியல் தொடர்பு உள்ளராவார். சிவபிரானது பிரதிபிம்பத்தில் தோன்றி, சிவபிரானுக்கு அணுக்கத் தொண்டராய் விளங்கியவர். தேவர்கள் அமுதம் வேண்டி திருப்பாற்கடலைக் கடைந்த போது வெளிப்பட்ட ஆலகால விடத்தினின்று தம்மைக் காக்கும்படி சிவபிரானிடம் முறையிடுகின்றனர். சிவனார், சுந்தரரை அனுப்பி ஆலால விடத்தை எடுத்துவரச் செய்து, அதனைத் தாம் உண்டு கண்டத்தில் அடக்கினார். விடத்தைக் கொண்டு வந்து கொடுத்த சுந்தரர் "ஆலால சுந்தரர்" ஆனார்(ஏழாம் திருமுறை, 1997, ஜீ.4). இவர் உயிர் வர்க்கத்தைச் சேர்ந்தவரானாலும் சிவசிருஷ்டி ஆவார்.

தமிழ்நாட்டில் திருநாவலூரில் அவதரித்து, 18 ஆண்டுகள் இந்நில உலக வாழ்வில் ஏழாந் திருமுறையில் 1026 பாடல்களை 100 திருப்பதிகங்களில் அருளிச்செய்து பூவுலக வாழ்வை நிறைவு செய்து, மானிட உடலுடன் மீண்டும் திருக்கயிலை சென்று இறைவனை அடைந்த பேரின்பப்பேறு பெற்றவர் சுந்தரர் பெருமான். இவரது காலம் எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும்.

## சைவ வழிபாட்டில் நால்வகை நெறிகள்

சைவ சமயச் சாத்திரங்கள் இறைவழிபாட்டில் நால்வகை நெறிகளாகச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவற்றைக் காட்டுகின்றன. நெறி என்பதற்கு வழி, பாதை எனப்படும். சரியை என்பது உடல்தொண்டு வழி வழிபடுதல் ஆகும். அதாவது கோயில் வழிபாடு மற்றும் தொண்டு செய்தலைக் குறிக்கும். மந்திரம் ஓதுதல், திருமுறை பாராயணம் போன்ற செயல்களை ஐம்புலன்களில் வாயினால் வழிபடுதல் கிரியையாகும். மனத்தினால் வழிபடுவது யோகம் எனப்படும். ஞானம் என்பது ஞானமாகிய பேறறிவால் வழிபடுவதைக் குறிக்கும். இது குருவடிவில் இறைவன் ஞானத்தை உணர்த்துவது ஆகும்.

## நால்வகை நெறிகள்

சைவ சமயத்தின் நால்வகை நெறிகளாகத் தாச மார்க்கம் (சரியை நெறி), சற்புத்திர மார்க்கம் (கிரியை நெறி), சக மார்க்கம் (யோக நெறி) மற்றும் சன்மார்க்கம் (ஞான நெறி) ஆகியவற்றைக் கூறுவர். இதனைச் சிவஞான சித்தியார்,

> சன்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்திர மார்க்கம்
>
> தாதமார்க் கம்என்றும் சங்கரனை அடையும்
>
> நன்மார்க்க நாலவைதாம் ஞான யோகம்
>
> நற்கிரியா சரியையென நவிற்றுவதும்செய்வார்.
>
> (சிவஞான சித்தியார் : 270)

என்று சுட்டுகின்றது. இந்நெறிகளைப் பின்பற்றிக் கடைதேர்ந்தவர்களாகச் சைவ சமயக் குரவர் நால்வரையும் குறிப்பிடலாம். திருநாவுக்கரசர் தாச மார்க்கமான தொண்டு நெறியையும், திருஞானசம்பந்தர் சற்புத்திர மார்க்கமான மகன்மை நெறியையும், சுந்தரர் சகமார்க்கமான தோழமை நெறியையும் மாணிக்கவாசகர் சன்மார்க்கமான குரு மாணவ நெறியையும் பின்பற்றி இப்பூவுலகில் வாழ்ந்துள்ளனர்.

## சுந்தரரின் பக்தித்திறன் வெளிப்பாடு

ஆன்மாவுக்கும் பரம்பொருளுக்குமிடையே உள்ள உறவைக் குறிப்பது "பக்தி" எனப்படும். இஃது உயிர்கள் இறைவனிடம் கொண்ட அன்பை விளக்குவது ஆகும். இறைவன்மீது தீராக்காதல் கொண்டு மனம் நெருக்குருகிப் பாடுவதும், ஆடுவதும், பணிவதும் பக்தி

நெறியின் சிறப்பாகும்.

இறைவனாகிய பரம்பொருளைத் தனது தந்தையாக, தாயாக, தோழனாக, குருவாக எண்ணி, தம் உள்ளத்து உணர்வுகளைப் பக்தியாக வெளிப்படுத்திய நாயன்மார் பலருள், தனித்துச் சுட்டப்படக்கூடிய பெருமை வாய்ந்தவர் சுந்தரர். இவர் பின்பற்றிய நெறி, யோக நெறியாகும். இரு நண்பர்க்கு இடையே உள்ள கருத்து ஒருமிப்பே 'யோகம்' என்று கூறப்படுகின்றது. அவ்வாறாக சுந்தரர் தமது திருமுறைப் பாடல்களில் வெளிப்படுத்தும் பக்தித்திறனைக் 'குருபக்தி', 'சிவபக்தி', 'அடியார் பக்தி' என மூவகைக் கோணங்களில் பகுத்து ஆராயலாம்.

### குருபக்தி

சுந்தரர் இறைவன்பால் கொண்ட குருபக்திக்கு அகச்சான்றாக இறைவனும் சுந்தரரும் நேர்முகமாக உரையாடிய சம்பவங்கள் திகழ்கின்றன:

### இறைவன் தடுத்தாட்கொள்ளுதல்

சுந்தரரது வாழ்க்கையில் முதன்மை நிகழ்ச்சியாக, சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெற்றது இந்நிகழ்வுதான். அதனை நினைவுகூர்ந்து தமக்கும் இறைவனுக்குமிடையே உயர்ந்த தோழமை நட்பை வளர்த்து அதன்வழி தம் வாழ்க்கையை செம்மைப்படுத்தியவர் சுந்தரர். அவர் தம்மை இறைவன் தடுத்தாட்கொண்ட போது பேசிய வார்த்தைகளை மீண்டும் நினைவு கூறுகிறார்:

> "அடியேனைத் தாம் ஆட்கொண்ட நாள்
>
> சபைமுன் வன்மைகள் பேசிய வன்தொண்டர்
>
> என்பதோர் வாழ்வு தந்தார்"
>
> (திருமுறை 7 : 7 : 2)

என்று தம் வாழ்வு முழுவதும் 'வன்தொண்டர்' என்று அழைக்கப்படுவதற்குக் காரணமாக அந்தச் சம்பவத்தைப் பக்தியோடு மனங்கொள்கிறார். திருவாரூரரும் இறைவன் திருவருளை நினைந்து உருகி, அன்பினால் கதறி, மெய்சிலிர்த்துக் கைகளைத் தலைமேல் குவித்து வணங்கி,"*எளியேனை வலிதில் தடுத்தாட்கொள்ள வந்தபரம்பொருளே! நும்மை எப்படிப் போற்றிப் புகழ்வேன்*" எனப் புலம்பினார் இறைவனும், "*எம்மை நீ " பித்தா" எனப் பேசியதால், "பித்தா" என்றே பாடுக!*" எனப் பணித்தார். அவ்வாறே, "பித்தாபிறை சூடிபெருமானே அருளாளா" (திருமுறை 7 : 1 : 1)என்ற திருப்பதிகத்தைத் தொடங்கி நிறைவேற்றினார் ஆரூரர்(ஆறுமுக நாவலர், *2008, 69*).

### பரவையார், சங்கிலியார் திருமணம்

ஒருநாள் சுந்தரர் வழிபாட்டிற்கு வரும்போது முன்வினைப்பயன் கூடி, பரவையார் என்ற பெண்ணின் கண்களோடு இவர்தம் கண்களும் கலந்தன. அதுவரை கல்லாய், கடினமாய் இருந்த உள்ளம் வெண்ணெயாய் உருகத் தொடங்கியது. பரவையாரும் கலங்கினாள். அன்றிரவே அடியவர் கனவில் தோன்றி, "நாளை பரவையைச் சுந்தருக்கு மணம் செய்யின்" என்றார். அதுபோல, சுந்தரர்பரவையார் கனவிலும் தோன்றி இறைவன் கூறினார்.

ஒரு மணத்தை நிறுத்தித் தடுத்தாட்கொண்டவர் தற்போது ஆலால சுந்தரர்க்கு வழங்கிய வாக்கைக் காக்க, நங்கை பரவையாரை மணந்து கொள்ள ஏற்பாடு செய்கிறார் என்றால் இருவரது பிணைப்பும் பக்திப்பெருக்கும் எவ்வளவு மேன்மை பொருந்தியவை என்பதை உணரலாம். இறைவன் பரவையாரைத் துணையாகத் தந்த திறத்தை,

> ஏழிசையாய் இசைப்பயனாய்
>
> இன்னமுதாய் என்னுடைய
>
> தோழனுமாய் யான்செய்யும்
>
> துரிசுகளும் குடனாகி
>
> மாழையொண்கண் பரவையைத்
>
> தந்தாண்டானை மதியில்லா
>
> ஏழையேன் பிரிந்திருக்கேன்
>
> என் ஆரூர் இறைவனையே.
>
> (திருமுறை 7 : 51 : 10)

என உளங்கசிந்து பக்தியோடு

பாடுகின்றார்.

சங்கிலி நாச்சியாரை மணம் புரிந்து இல்லறம் நடத்தியதை இறைவன் அருளே என்ற வாக்கால் உணரலாம். சங்கிலி நாச்சியாருடன் சுந்தரருக்கு நிகழ்ந்த திருமணத்தைப் பின்வரும் திருப்பாடல்கள் சான்று பகர்கின்றன.

ஓர்ந்தனன் ஓர்ந்தனன் உள்ளத்துள்ளே ஒண்பொருள்

சேர்ந்தனன் சேர்ந்தனன் சென்று திருவொற்றியூர்புக்குச்

சார்ந்தனன் சார்ந்தனன் சங்கிலிமென் தோள்தடமுலை

ஆர்ந்தனன் ஆர்ந்தனன் ஆமாத்துரையன் அருளதே.

(திருமுறை 7 : 45 :4)

நாய்யேனைப் பொருட்படுத்துச் சங்கிலியோடு எனைப்

புணர்த்த தத்துவனை...

(திருமுறை 7 : 51 :11)

மான் திகழும் சங்கிலியைத் தந்து வருபயன் களெல்லாம்

தோன்ற அருள் செய்தாய்...

(திருமுறை 7 : 89 : 10)

### தில்லைச் சிற்றம்பலக்காட்சியில் பேரம்பல அருள் அனுபவம்

சுந்தரமூர்த்தி நாயனார், மேலைச் சிதம்பரமாகிய பேரூர் பேரம்பலத்தைத் தரிசித்தபின் சிதம்பரம் வந்து தில்லை பொன்னம்பல நடராசர் தரிசனத்தின் போது பேரூரில் கண்ட நடனக் கோலத்தைச் சிற்றம்பலத்தில் கண்டு சிற்றம்பலக்காட்சியில் பேரம்பல திருவருள் அனுபவம் பெருகிறார். ‘மடித்தாடும் அடிமைக்கண்’ எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடுகின்றார் சுந்தரர். இப்பதிகம் முழுவதும் அருள் அனுபவம் குறித்த செய்திகள் மிகுந்துள்ளன. இப்பத்துப் பாடல்களில் ‘தடுத்தாட்கொள்வான்’ எனும் சொல் காணப்படுகின்றன. இதனை,

பாரூரும் அரவல்குல் உமைநங்கை

அவள்பங்கன் பைங்கண் ஏற்றன்

ஊரூரன் தருமனார் தமர் செக்கிலிடும்போது

தடுத்தாட் கொள்வான்

ஆரூரன் தம்பிரான் ஆரூரன் மீ

கொள்கில் அணிகாஞ்சிவாய்ப்

பேரூரர் பெருமானைப் பெரியானைப்

புலியூர்ச்சிற் றம்பலத்தே பெற்றா மன்றே.

(திருமுறை 7 : 90 : 10)

எனும் பாடலின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. இப்பாடல்கள் அனைத்திலும் சிவபெருமான் தன்னைத் தடுத்தாட்கொண்டதை எண்ணி சுந்தரர் பெருமகிழ்ச்சி அடைந்ததைக் காண முடிகின்றது.

### பரவையார் சீற்றம் தணிய இறைவனைத் தூது அனுப்புதல்

சுந்தரர் சங்கிலியாரைத் திருமணம் செய்ததால், பரவையார் ஊடல் கொள்கிறாள். ஊடலைத் தீர்க்கும் பொருட்டுத் திருவாரூர் இறைவன் இரு முறை தூது சென்ற நிகழ்ச்சிகள் குறிப்பிடத்தக்கவை.

நம்பியாரூரர் தம் பொருட்டுத் தூது சென்ற இறைவனை எதிர்ப்பார்த்துக் கொண்டு வழி மேல் விழி வைத்துக் காத்துக் கொண்டிருக்கிறார். சுந்தரரின் நிலையைச் சேக்கிழார்ப் பெருமான்,

தூதரைப் போகவிட்டு

........................

வருவதே கருத்துட் கொள்வார் (ஆலங்காட்டு மாலை 2 : 345)

என்று மேம்படச் சித்திரிக்கின்றார்.

### திருத்தொண்டத் தொகை அருளியமை

சைவத் திருக்கோலமும், புதுமணக் கோலமும் கொண்ட ஆரூரர், ஒருநாள் திருக்கோயில் சென்று அங்குள்ள ‘தேவாசிரியன்’ எனும் மண்டபத்தில் சிவனடியார் கூட்டம் நிறைந்துள்ளதைக்

கண்டு, “இந்த அடியாருக்கு அடியார் ஆகும் நாள் எந்நாளோ?” என்று மனம் வருந்துகின்றார். அப்போது சுந்தரரின் மனக்கருத்தையுணர்ந்த எம்பெருமான், “நீர் அவர்கள் மீது பதிகம் பாடுக,” என்று பணித்து, ‘தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்’, என்று அடியெடுத்துக் கொடுக்க, அதனையே முதலாகக் கொண்டு “திருத்தொண்டத் தொகை” பாடியருளினார் ஆரூரர். இதனை, ஆரூரர்,

பண்டே நின்னடியேன்

அடியாரடி யார்கட்கு எல்லாம்’

தொண்டே பூண்டொழிந்தேன்

தொடராமைத் துரிசறுத்தேன்..

(திருமுறை 7 : 24 : 2)

எனப் பதிவுசெய்கின்றார். ஆக, இறைவனே தன்னடியானுக்குப் பாடல் பாட அடியெடுத்துக் கொடுத்திருப்பது அவரது பக்தித்திறனுக்கு மணிமுடியாகத் திகழ்வதாகும்.

இத்திருத்தொண்டத் தொகையை ஆதாரமாகக் கொண்டு நம்பியாண்டார் நம்பிகள் ‘திருத்தொண்டர் திருவந்தாதி’ எனும் வழிநூலைப் பாடினார். இவற்றை அடியொற்றிச் சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராணம் (திருத்தொண்டர்ப்புராணம்) எனும் சார்பு நூலை விரிவாகப் பாடினார்.

### சிவபக்தி

தலயாத்திரை வழி சுந்தரர் நிகழ்த்திய அற்புதங்கள் அவர்தம் சிவபக்திக்குத் தக்கச் சான்றாகும்.

### தல வழிபாட்டு முக்கியத்துவம் : தில்லை சிற்றம்பலக்காட்சி

சுந்தரர் நடுநாட்டு, சோழநாடு, தொண்மை திருத்தலங்களுக்குச் சென்றுள்ளார். சுந்தரர் சிற்றம்பல சிவபெருமானை வணங்குகிறார். இறைவனது அருட்கூத்தில், பேரின்ப வெள்ளத்தில் மூழ்கிவிடுகிறார். இதனைச் சேக்கிழார் பெருமான்,

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள

..........................................

மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார் (பெரியபுராணம் : 106)

என்று சுட்டுகின்றார்.

### நெல் பெறுதல் (திருக்கோளிலியில்)

குண்டையூர் கிழார் என்பவர் சிவபெருமான் அருளால் வன்தொண்டருக்கு வழங்கும் பொருட்டு மிகுதியான நெல்லைப் பெற்று வைத்திருந்தார். அதனைத் திருவாரூருக்கு எடுத்துச் செல்ல ஆட்கள் வேண்டுமே என்று நம்யாரூரர் எண்ணினார். இதனை அவர்,

நீள நினைந்தடி யேன்

................

ஆளிலை எம்பெருமான் அவை

அட்டித் தரப்பணியே...

(திருமுறை 7 : 20 : 1)

என்று பாடிட, சிவபெருமான் ஏவலால் பூதங்கள் நெல் முழுவதையும் திருவாரூருக்குக் கொண்டு சேர்ந்தன.

### அடியார் பக்தி

பக்தியின் முதல்நிலை இறைவனை வழிபடுதல் என்றால் பக்தியின் நிறைநிலை சிவனடியாரை வழிபடுதலாகும். சிவனடியார்களையே தனது வாழ்வின் முதலாகக் கொண்டு தொண்டர்க்குத் தொண்டனாகி திருத்தொண்டத் தொகை வழங்கிய அருளாளன் சுந்தரமூர்த்தி சுவாமிகள். அவர் தன்னை, ‘அடியாருக்கு அடியன்’ என்றழைத்து அகமகிழ்கிறார். சிவபெருமானுக்கு மட்டுமின்றி அவரடியாருக்கும் ஆட்பட்ட திறனை,

பண்டே நின்னடியேன்

அடியாரடி யார்கட்கு எல்லாம்

தொண்டே பூண்டொழிந்தேன்...

(திருமுறை 7 : 24 :4)

என்னும் பாடலால் விளக்குகின்றார் நம்பியாரூரர்.

திருஆலங்காட்டுப்பதிகத்தில்,

ஆத்தா ஆலங்காடா உன்னடியார்க் கடியேன் ஆவேனே...

(ஆலாங்காட்டு மாலை : 2 : 607)

என்றும் குறிப்பிடுகிறார். இறைவன் வெளிப்படும் இடங்களுள் சிவனடியார்களும் ஒன்றாகும் என்பது சைவமரபு. அத்தகு மாண்புக்குரிய சிவனடியார்களின் பெருமையைத் திருத்தொண்டத்தொகையில்,

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்...

(திருமுறை : 7 : 39 : 1)

எனச் சுந்தரர் அறிமுகம் செய்து வைக்கிறார்.

ஞான சம்பந்தரை,

எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன் (திருமுறை : 7 : 39 : 5)

என்று கூறியவர், திருமூலரை,

நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன் (திருமுறை : 7 : 39 : 5)

எனப் பாடுகின்றார். திருநாவுக்கரசரை

திருநின்ற செம்மையாய் செம்மையே நின்ற நாவுக்கரசரையன்றன் அடியார்க்கும் அடியேன்... (திருமுறை : 7 : 39 : 4)

என ஆராதிக்கின்றார்.

சிவனடியார்களின் திருத்தொண்டு களையும் பக்தித்திறங்களையும் உலகறியச் செய்த பெருமை சுந்தருக்கே உரியதாகும். நம்பியாண்டவர் நம்பி, திருந்தொண்டர் திருவந்தாதி பாடவும் சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணம் பாடவும் முழுமுதல் பொருளாக அமைந்தது சுந்தரரின் திருத்தொண்டத் தொகையாகும்.

சுந்தரர் ஆற்றிய செயற்பாடுகளிலே சிறப்பம்சம் பெறுவது அவரது பக்தி இயக்க வரலாற்றுப் பணியாகும். அவ்வகையில் அவரது திருத்தொண்டத் தொகை என்ற பதிகம் வரலாற்று முக்கியத்துவமுடையதொன்றாகும். இதில் சுந்தரர் தமது காலத்திற்கு முன் வாழ்ந்த அடியார்கள் மற்றும் தமது சமகால அடியார்களின் பெயர்களைச் சுட்டி, அவர்கள் அனைவருக்கும் தான் அடியவன் எனக் கூறிக் கொள்ளும் தன்மை, அவரது அடியார் பக்திக்கே மணிமகுடமாகத் திகழ்வதாகும்.

## முடிவுரை

சிவநெறிப் பண்பாடு தழைக்க வந்த சமயக் குரவர்களுள் யோக நெறியையும் தோழமை நெறியையும் அடிப்படையாகக் கொண்டு சிவபுண்ணியம் பெற்ற பெருமகனார் சுந்தரமூர்த்தி நாயனார் ஆவார். பரவையார், சங்கிலியார் என்னும் இரு நங்கையரைத் திருமணம் செய்து கொண்டு இல்லறத்தில் இருந்தும், இறைவன் திருவடியை அடையலாம் என்பதைத் தன் வாழ்க்கையால் உலகிற்கு எடுத்துக்காட்டியவர் இவர். இறைவனிடத்தில் கொண்ட அளவற்ற அன்பினால் தம்மைத் தடுத்தாட்கொள்ளும் வேதியராகவும், தொண்டராகவும், தூதுவராகவும் இறைவனையே “கொண்டவர்” இவர். மேலும், வாக்குத் தவறினால் அடியாரானாலும் தண்டனையை அனுபவித்தே தீர வேண்டும் என்பதைத் தன் வாழ்க்கை அனுபவத்தால் காட்டிய அருளாளர் இவர். பக்தி உலகுக்குச் சுந்தரர் எடுத்துணர்த்திய இறையனுபவ சிந்தனைகள் பிறவிப்பிணி போக்கும் அருமருந்தாகும்.

## References

Arunaivelu Mudaliyar, C. (1997). Cuntaramūrtti Cuvāmikaḷ Aruḷic Ceyta Tēvārat Tiruppatikaṅkaḷ (Ēḻām Tirumuṟai – Poḻippurai, Viḷakkak Kuṟippukaḷuṭaṉ). Mayiladuthurai: Nyanasambanthan Pathippagam.

Arumugam Navalar. 2nd Edition. (2000). Periyapurāṇa Vacaṉa Kāviyam. Tanjavur: Sarasuvathy Mahal Noolagam.

Ragubaran, Su. & Sri Prasanthan. (2014). Mūvar Tami̱lum Caiva Neṟiyum. Colombo: Hindu Samaya Kalachara Aluvalkal Thinaikalam.

Sengalvaraya Pillai, Va., Su. (1963). Tēvāra Oḷi Neṟi – Cuntarar (Ārāyccip Pakuti: Talaippu 1 – 261). Thirunelveli: Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam.

Nadarasan, P., Ra. (2000). 7-Ām Tirumuṟai Cuntaramūrtti Cuvāmikaḷ Tēvāram (Varalāṟṟu Muṟaiyil Mūlamum Uraiyum). Chennai: Uma Pathipagam.

Narayana Velupillai, M. (2004). Cuntaramūrtti Cuvāmikaḷ Aruḷic Ceyta Tēvāram (Ēḻām Tirumuṟai). Chennai: Varthamanan Pathipagam.

Paramasivam, Ta., Ko., Nallanayagi, Pa. & Nallasivam, Ko. Pa. (2005). Cuntarar Āyvu Mālai – Tokuti 1. Varanasi: Kumarasami Thirumadam.

Paramasivam, Ta., Ko., Nallanayagi, Pa. & Nallasivam, Ko. Pa. (2005). Cuntarar Āyvu Mālai – Tokuti 2. Varanasi: Kumarasami Thirumadam.

Paramasivam, Ta., Ko., Nallanayagi, Pa. & Nallasivam, Ko. Pa. (1982). Tami̱ḻ Lekcikaṉ (Pakuti 1). Chennai: Madras University.